DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.
**CASE NO.STC.No. 99 /2025**
**PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | ராதா(LW–1) |
| Father's Name | : | த/பெ. ராசப்ப நாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date: 12.11.2025

**விசாரணை தொடங்கும் நேரம்**: நண்பகல் 12.10

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

**1.** நான் நாமக்கல் மாவட்டம் மோகனூர் புதுபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சென்ற வருடம் 11 வது மாதம் இரவு 8.00 மணியளவில் புதுபட்டியில் இருக்கும் மளிகை கடையில் நான் பீடி வாங்கி விட்டு நாமக்கல் – திருச்சி சாலையில் கடப்பதற்காக நின்று கொண்டு இருந்தேன். அப்போது நாமக்கலில் இருந்து திருச்சி நோக்கி வந்த கார் என் மீது தட்டி விட்டு 50 அடி தூரம் சென்று அங்கு இருந்த இரண்டு நபர் மீது அடித்து விபத்தை ஏற்படுத்தியது அதில் ஒருவர் குழந்தை மற்றொருவர் பெண்.

2. அந்த கார் முழு வேகமாக வந்து கண்ரோல் இல்லாமல் வந்து எங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அந்த காரின் பதிவெண் எனக்கு தெரியவில்லை அதன் நிறம் தெரியவில்லை. அடித்தவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். எனக்கு இடது தோள்பட்டை தலை, மற்றும் வலது காலில் காயங்கள் ஏற்பட்டது. வலது கால் உடைந்து விட்டது. காலில் போல்ட் பொருத்தப்பட்டுள்ளது. (**சாட்சி காலில் ஏற்பட்ட காயத்தை காண்பிக்கிறார்**).

**3.** நான் கீழே விழுந்தவுடன் அங்கிருந்தவர்கள் என்னை ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் தனியார் மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். போலீசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அடிபட்டவுடன் நான் கீழே விழுந்துவிட்டதால் காரை ஓட்டி வந்தவரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**4.** போலீசார் எப்போது எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்து அன்றே போலீசார் மருத்துவமனைக்கு வந்ததாக எனது மனைவி சொல்லி தெரிந்து கொண்டேன். இரண்டு மூன்று நாட்கள் கழித்து நான் கண் விழித்தவுடன் இரண்டு, மூன்று முறை என்னை

மருத்துவமனையிலும் வீட்டிலும் விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எனது மனைவிதான் போலீசாருக்கு விபத்து குறித்த வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். எனது மனைவி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில்தான் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் என்னை இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் 4 வழிச்சாலை என்றால் சரியல்ல 3 வழிச்சாலை. பொதுவாக சாலை கடக்கும் நபர்கள்தான் இருபுறமும் சாலை நன்கு கவனித்து கடக்க வேண்டும் என்று சொன்னால் நான் சாலையின் ஓரம் நின்று கொண்டிருந்தபோது விபத்து நடந்தது. எனக்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. நான் பீடி வாங்கிய கடைக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 அடி இருக்கும். நான் எந்த இடத்தில் இருந்தபோது விபத்து ஏற்பட்டது என்றால் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. பொதுவாக பேருந்து நிறுத்தம் இருக்கும் இடத்தில் வாகனங்கள் மெதுவாக செல்லும் என்றால் சரியல்ல. விபத்து பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்றது என்று நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. எதிரி ஓட்டி வந்த வாகனத்தால் எனக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு விபத்தானது எதிரியின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்படவில்லை என்று சொன்னாலும் நஷ்டஈடு வழக்கில் அதிக நஷ்டஈடு பெறவேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு பதிந்து பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல

**மறுவிசாரணை: இல்லை**

விசாரணை முடியும் நேரம்: நண்பல் 12.40